முதலாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், சேலம்

முன்னிலை: திரு. இரா.வேலரஸ், B.Sc.,B.L., LL.M.,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, சேலம்.
2025–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 04 ம் நாள் வியாழக்கிழமை

இடைநிலை மனு எண். 03/2021
in
அசல் வழக்கு எண். 127/2021

1. சியாமளா கௌரி
2. மைனர் திவ்யேஷ்
மைனரின் சார்பாக அடுத்த தோழி/ பாதுகாவலர் தாயார்
சியாமளா கௌரி ... மனுதாரர்கள்/ வாதிகள்

/எதிர்/

1. வெங்கடேஷ்
2. சார்பதிவாளர், ஓமலூர்
3. மாவட்ட ஆட்சியர், சேலம் .... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு 05.11.2025 ம் தேதி என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.S.விஜயராகவன் அவர்கள் முன்னிலையாகியும், 1–ம் எதிர்மனுதாரர்/ 1–ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.M.செல்வகீதன் அவர்கள் முன்னிலையாகியும், 2 மற்றும் 3 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் அழைத்தும் ஆஜரின்மையால் அவர்கள் தோன்றாத்தரப்பினர்களாக கருதப்பட்டும், இரு தரப்பு வாதுரைகளை கேட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்து, இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்:–

உத்தரவு

மனுதாரர்கள்/வாதிகள் உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டம் கட்டளை 6 விதி 17–இன் கீழ் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தை அசல் வழக்கில் 7–வது அயிட்ட சொத்தாக சேர்த்து தாவாவை திருத்தம் செய்ய உத்தரவிடக்கோரி மனு தாக்கல் செய்துள்ளார்கள்.

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2025.12.04 18:32:09 +0530

2. <u>மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆணையுறுதி ஆவணத்தில் கூறப்பட்டுள்ள சங்கதிகளின் சுருக்கம் பின்வருமாறு:–</u>

மனுதாரர்கள் அசல் வழக்கில் வாதிகள் ஆவார்கள். முதல் மனுதாரர்/1–ம் வாதி தனக்காகவும் தனது மைனர் மகன் 2–ம் மனுதாரர்/2–ம் வாதிக்காகவும் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். அசல் வழக்கானது வாதிகளால் பாகப்பிரிவினை மற்றும் இதர பரிகாரங்கள் கோரி முதல் பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்கள் தங்களுக்கு 2/3 – பங்கு உரிமையுள்ள சொத்துக்களின் விவரங்களை தாக்கல் செய்துள்ளதாகவும், மேலும் இம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தானது கவனக்குறைவின் காரணமாக விடுபட்டு விட்டது என்றும், மேற்படி சொத்தானது முதல் மனுதாரரின் தாத்தாவால் தங்கள் நலன்கருதி 1–ம் எதிர்மனுதாரர் பெயரில் வாங்கப்பட்டது என்றும், எனவே மேற்படி மனுவுடன் இணைக்கப்பட்டுள்ள சொத்தினை 7–வது அயிட்ட சொத்தாக அசல்வழக்கில் சேர்த்து தாவாவை திருத்தம் செய்ய அனுமதிக்கவேண்டுமாய் கோரப்பட்டுள்ளது.

3. <u>1–ம் எதிர்மனுதாரர்/1–ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பதிலுரையில் கூறப்பட்டுள்ள சங்கதிகளின் சுருக்கம் பின்வருமா:</u>–

மனு சட்டப்படியும் பொருண்மைகளின்படியும் நிலைநிற்கத்தக்கது அல்ல. இந்த எதிர்மனுதாரர்/1–ம் பிரதிவாதியால் ஒப்புக் கொள்ளும் சங்கதிகளை தவிர மற்ற சங்கதிகளை மனுதாரர்களே நிரூபிக்க கடமைப்பட்டவர்கள் ஆவார்கள். அசல் வழக்கானது மனுதாரர்கள்/வாதிகளால் பாகப்பிரிவினை மற்றும் இதர பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1–ம் எதிர்மனுதாரர்/1–ம் பிரதிவாதி 20.04.2021 அன்று ஓமலூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஒரு ராமசாமி என்பவருக்கு பெயரளவில்

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2025.12.04 18:32:18 +0530

கிரையப்பத்திரம் எழுதி கொடுத்துள்ளார் என்பதும், மேற்படி பெயரளவில் ஏற்படுத்தப்பட்ட கிரையப்பத்திரம் செல்லத்தக்க ஆவணமல்ல என்பதும், மேற்படி 1–ம் எதிர்மனுதாரரின் செயலானது மனுதாரர்களை ஏமாற்றும் நோக்கில் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதும், மேற்படி கிரையப்பத்திரத்தின்படி சொத்தை வாங்கிய ராமசாமி பட்டா பெற முயற்சித்து வருகிறார் என்பதும், இவ்வழக்கில் இறுதி முடிவு எட்டப்படுவதற்காக மேற்படி ராமசாமி இவ்வழக்கிற்கு அவசிய தரப்பினர் என்று கூறுவதும் தவறானதும், மற்றும் சட்டப்படி நிலைக்கத்தக்கதுமல்ல. மேற்படி ராமசாமிக்கு 1–ம் எதிர்மனுதாரர்/1–ம் பிரதிவாதியால் 20.04.2021 அன்று ஏற்படுத்தப்பட்ட கிரையமானது உண்மையானதும், செல்லத்தக்கதுமாகும். ஏனெனில் 1–ம் எதிர்மனுதாரர் சுயமாக வாங்கிய சொத்துக்கள் ஆகும். மேற்படி 1–ம் எதிர்மனுதாரரால் சுயமாக வாங்கப்பட்ட சொத்துக்களில் உரிமை கோர வாதிகளுக்கு எவ்வித உரிமையும் இல்லை. முதல் எதிர்மனுதாரரின் பெயரில் தங்கள் தாத்தா சொத்துக்களை வாங்கினார் என்று 1–ம் மனுதாரர் கூறுவது முற்றிலும் தவறானதாகும். ஏனெனில் வழக்கு சொத்துக்கள் 1–ம் எதிர்மனுதாரரால் மட்டுமே வாங்கப்பட்டுள்ளன. பினாமி பரிவர்த்தனைகள் (தடை) சட்டம், 1988, குறிப்பாக பிரிவு 3(2) அமலுக்கு வந்தது, "உட்பிரிவு 1 இல் உள்ள எதுவும் எந்தவொரு நபரும், அவரது மனைவி மற்றும் அவரது திருமணமாகாத மகள் பெயரில் சொத்து வாங்குவதற்குப் பொருந்தாது. மேலும் அந்த சொத்து மனைவி அல்லது திருமணமாகாத மகளின் நலனுக்காக வாங்கப்பட்டது என்று மாறாக நிரூபிக்கப்படாவிட்டால் அது கருதப்படும்" ஆனால் இந்த வழக்கில் 1ம் மனுதாரரால் கூறப்படும் கூற்றுகள் 1–ம் எதிர்மனுதாரர்/ 1–ம் பிரதிவாதியின் தாத்தா தனது குடும்ப நலனுக்காக 1–ம் எதிர்மனுதாரரின் பெயரில் கிரையம் செய்தார் என்ற வாதத்திற்காக

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2025.12.04 18:32:25 +0530

கருதப்பட்டால், பினாமி பரிவர்த்தனையின் கீழ் மட்டுமே வருகிறது. அது சட்டத்தால் ஏற்றுக்கொள்ளப்பட இயலாது. மேலும் பினாமி பரிவர்த்தனைகள் (தடை) சட்டம், 1988 அமலுக்கு வந்தபோது குறிப்பாக பிரிவு 4(1) "பினாமி சொத்து தொடர்பாக எந்தவொரு உரிமையும் அமல்படுத்த, எந்தவொரு வழக்கும், உரிமைகோரலும் அல்லது நடவடிக்கையும், சொத்து வைத்திருக்கும் நபருக்கு எதிராகவோ அல்லது வேறு எந்த நபருக்கு எதிராகவோ அத்தகைய சொத்தில் உண்மையான உரிமையாளர் என்று கூறும் ஒரு நபரால் அல்லது அவரது சார்பாகவோ தொடரபடக்கூடாது" என்று கூறுகிறது. எனவே மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட இம்மனு சட்டப்படி நிலைக்கத்தக்கது அல்ல. மனுவில் கூறப்பட்ட சொத்தானது பொதுவான அல்லது மூதாதையர் சொத்து அல்ல. இது 1–ம் எதிர்மனுதாரரால் சுயமாக சம்பாதிக்கப்பட்ட சொத்து ஆகும். எனவே மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தை இவ்வழக்கில் சேர்க்க இயலாது. எனவே இம்மனு நிலைக்கத்தக்கதல்ல. மனுவை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

4. இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியம் அளிக்கவில்லை மற்றும் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

5. <u>இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்:–</u>

6. இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

7. தீர்வு:–

மனுதாரர்கள்/வாதிகள் உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டம் கட்டளை 6 விதி 17–இன் கீழ் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தை அசல் வழக்கில் 7–வது அயிட்ட சொத்தாக சேர்த்து தாவாவை திருத்தம் செய்ய உத்தரவிடக்கோரி மனு தாக்கல்

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2025.12.04 18:32:32 +0530

செய்துள்ளார்கள்.

8. மனுதாரர்கள் இந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களை வழக்கு சொத்து விபரத்தில் 7–வது அயிட்டமாக சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி அசல் வழக்கானது வழக்கு சொத்துக்களைப் பொறுத்து பாகப்பிரிவினை மற்றும் தனி சுவாதீன பரிகாரம் கோரியும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் 1–ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக ஜீவனாம்ச பரிகாரம் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கு நிலுவையில் இருந்த சமயத்தில் பாகப்பிரிவினை செய்யப்பட வேண்டிய இந்த மனு சொத்து விடுபட்டுவிட்டது என்று தெரிவித்து இந்த மனு சொத்தையும் வழக்கில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று மனுதாரர்கள் பரிகாரம் கோரியுள்ள காரணத்தினால் மேற்படி 1–ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் எதுவும் இந்த மனுவினை நிராகரிப்பதற்கு போதுமானவை அல்ல. இந்த மனுவில் கண்டுள்ள சொத்துக்கள் வழக்கில் சொத்துக்களாக சேர்க்கப்பட்டு விட்டது என்ற காரணத்திற்காக 1–ம் எதிர்மனுதாரர்/1–ம் பிரதிவாதி அவருக்குண்டான எதிர் கட்சியை செய்வதற்கு உரிமையற்றவர் என்று இந்நீதிமன்றம் கருதவில்லை. எனவே, அசல் வழக்கில் பகுதி பாக பிரிவினைக்காக மனுதாரர்கள்/வாதிகளால் பாகப்பிரிவினை பரிகாரம் கோரப்பட்டுள்ளது என்று வழக்கு முடிவடையும் சமயத்தில் அறியப்படும்போது அது மனுதாரர்கள்/வாதிகளின் வழக்கினை பாதிக்க கூடியதாகவும் கூடுதல் வழக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியதாகவும் அமைந்து விடும். எனவே மேற்படி மனுவில் சொல்லப்பட்டுள்ள சொத்துக்கள் 1–ம் எதிர்மனுதாரர்/1–ம் பிரதிவாதிக்கு சம்மந்தப்பட்ட சொத்துக்கள் அல்ல என்று அவர் தரப்பில் குறிப்பான மறுப்பு எதுவும்

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2025.12.04 18:32:40 +0530

தெரிவிக்கப்படாத காரணத்தினாலும் பின்னிட்ட கிரையதாரர் ராமசாமியும் இ.ம.எண்.2/2021–ல் ஏற்பட்ட உத்தரவின்படி 4–ம் பிரதிவாதியாக சேர்க்கப்பட உள்ளார் என்பதாலும் மேற்படி மனுவில் கண்டுள்ள சொத்தினை அசல் வழக்கில் சேர்த்துக்கொண்டு மனுதாரர்கள்/வாதிகள் தெரிவிப்பதுபோன்று அதில் உரிமை உள்ளதா? என்பதை முடிவு செய்வதே நீதிக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனவே, மனுதாரர்கள்/வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனுவினை அனுமதித்து உத்தரவிடுவதே நீதிக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

முடிவில், மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் விரிவாக்கம் செய்து, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிறகு என்னால் சரி பார்க்கப்பட்டு, 2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 04ம் நாளான இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2025.12.04 18:32:48 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,

சேலம்.

மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :– இல்லை

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்: – இல்லை

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2025.12.04 18:32:54 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.